www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

ARIYALUR DISTRICT



பதிவெண் : 010301

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

10-ம் வகுப்பு **தமிழ்** மதிப்பெண்கள் : 50
நேரம் : 1.30 மணி

## பகுதி - 1

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** 5x1=5

1. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க
   அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
   இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்
2. தமிழனத்தை ஒன்று படுத்தும் இலக்கியமாக ம.பொ.சி.கருதியது..........
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
3. மேன்மை தரும் அறம் என்பது ..............
   அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது ஆ) மறு பிறப்பில் பயன்பெறலாம் என அறம்செய்வது
   இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது
4. வீட்டைத்துடைத்துச் சாயம் அடித்தல் இவ்வடி குறிப்பிடுவது............
   அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
   இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை
5. ஆசிரியப்பாவிற்கு உரிய ஓசை
   அ) அகவல் ஓசை ஆ) செப்பலோசை இ) துள்ளல்ஓசை ஈ) தூங்கலோசை

**II. பாடலை படித்து வினாக்களுக்கு விடையளிக்க** 3x1=3

"பகர்வனர் திரிதரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்திநூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்".

6. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
7. இப்பாடலில் இடம் பெற்ற மோனைச் சொற்களை எழுதுக?
8. காருகர் - பொருள் தருக.

## பகுதி - 2 (பிரிவு - 1)

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 4x2=8

9. மெய்க்கீர்த்தி பாடுவதன் நோக்கம் யாது?
10. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர்- சிலப்பதிகாரம காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
11. அவையம் குறிப்பு வரைக?
12. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
13. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை எழுதுக?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



(பிரிவு - 2)

**IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4x2=8**

14. விடைகளுக்கேற்ற வினாத்தொடர் அமைக்க
    அ) சிலம்புச் செல்வர் என போற்றப்படுபவர் ம.பொ.சிவஞானம்
    ஆ) காலக்கணிதப் பாடலின் ஆசிரியர் கண்ணதாசன்
15. கலைச்சொற்கள் தருக - அ) Document ஆ) Belief
16. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக.
    அ) புதுக்கோட்டை ஆ) கோயம்புத்தூர் இ) திருச்சிராப்பள்ளி ஈ) புதுச்சேரி
17. அகராதியில் காண்க அ) ஆசுகவி ஆ) மதுரகவி
18. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
    அ) மனக் கோட்டை ஆ) கண்ணும் கருத்தும்

பகுதி - 3

**V. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

குறிப்பு : (21 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்) **3x3=9**

19. முதல் மழை விழுந்ததும் என்ன வெல்லாம் நிகழ்வதாக கு.ப. ரா. கவிபாடுகிறார்?
20. வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத்தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி பத்தி அமைக்க.
21. மாற்றம் எனத் தொடங்கி அட்சய பாத்திரம் என முடியும் வரையுள்ள காலக்கணிகப் பாடலை எழுதுக.
22. நீங்கள் செய்த அறங்களை பட்டியலிடுக.

பகுதி - 4

**VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2x5=10**

23. உமது தெருவில் பழுதடைந்த மின் விளக்கினை சரிசெய்யுமாறு மின்வாரிய அலுவலருக்கும் கடிதம் எழுதுக?
24. வெண்பா, ஆசிரிப்பாவின் வேறுபாட்டை அட்டவணைப்படுத்தி எழுதுக.
25. காட்சியைக் கண்டு கவிஞுறு எழுதுக.



பகுதி - 5

**VII. கட்டுரை வடிவில் விரிவான விடையளிக்கவும் 1x7=7**

26. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வீதிகளோடு ஒப்பிடுக?

(அல்லது)

"சாலை பாதுகாப்பு" குறித்து கட்டுரை எழுதுக.

************



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com